19.11.2025

O.S.No.43/2011

வா.சா.1.திரு. மகேந்திரன், த.பெ.கருப்பணன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. 1ம் வாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை. மருத்துவமனையில் உள்ளார். எந்த மருத்துவமனையில் எவ்வளவு நாட்களாக இருந்தார் என்றால் இரண்டு நாட்களாக மருத்துவமனையில் இருந்தார். 1ம் வாதியின் பேரனும் மருத்துவர் தான் வீட்டில் வைத்து பார்க்கிறார். எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த விவரம் தெரியாது. சாட்சி தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்த 1ம் வாதியை காண்பித்து நீதிமன்றத்திற்கு வந்துள்ளதாகவும், சாட்சி தான் நீதிமன்றத்திற்கு வரச் சொன்னதாகவும் தெரிவிக்கிறார். நாங்கள் 1ம் வாதியை இந்த வழக்கில் விசாரிக்கப் போகிறோமா என்றால் அவருக்கு உடல்நலம் சரியில்லை. வயதாகிவிட்டது. அவரை நாங்கள் விசாரிக்கவில்லை.

2. 3ம் வாதி ரகு நீதிமன்றத்திற்கு வந்துள்ளரா என்றால் வந்துள்ளார். 5ம் வாதி தவமணி எங்கு உள்ளார் என்றால் வெளிநாட்டில் உள்ளார். 3ம் வாதி ரகு இதற்கு முன்பாக எந்த நாட்டில் இருந்தார் என்றால் சிங்கப்பூரில் இருந்தார். எத்தனை ஆண்டுகளாக இருந்தார் என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்தபோது, 3ம் வாதி இங்கு தான் இருந்தார். எப்போது வெளிநாட்டில் இருந்து வந்தார் என்றால் அவ்வப்போது வந்து செல்வார். வாதிகள் இந்த வழக்கை அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரை என்ற அடிப்படையில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம்.

வெள்ளாளப்பட்டியில்  அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையைச் சேர்ந்த நபர்கள் மொத்தம் எத்தனை பேர் இருப்போம் என்றால் 80 பேர் இருப்போம். மேற்படி, 80 நபர்களிடமும் சம்மதம் பெற்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் முக்கியமான நபர்கள் மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3. வெள்ளாளப்பட்டி கிராமத்தை பொறுத்தவரை, பெரியபுலியன் பேரன்மார் கரை என்று உள்ளது என்றால் சரிதான். அதேபோல், வகுத்துப்புலியன் பேரன்மார் கரை என்று உள்ளது என்றால் ஆமாம். அது 3வது கரை ஆகும். கருப்பாத்தான் பேரன்மார் கரை என்று உள்ளது என்றால் தனியாக அந்த கரை கிடையாது எங்களுடன் சேர்ந்த அதாவது அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையில் உட்கரை ஆகும். கருப்பாத்தான் பேரன்மார் கரை என்பது எங்களது கரையுடன் சேர்ந்த கரை என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளோம். அதேபோல், தனிக்கண் பேரன்மார் கரை என்று உள்ளது என்றால் ஆமாம்.

4. மேற்படி, நான்குகரையை சேர்ந்த நபர்கள் தான் சுழற்சி முறையில் அம்பலக்காரர் பட்டம் கட்டுவது வழக்கம் என்றால் கருப்பாத்தான் பேரன் கரை மட்டும் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரைக்கு உட்கரை ஆகும். ஆனால் அவர்களுக்கும் சுழற்சி முறையில் அம்பலக்காரர் பட்டம் கட்டுவது வழக்கம். பெரிய புலியன் பேரன்மார் கரையில் சுப்பையா அம்பலக்கரராக இருந்தார் என்றால் ஆமாம். அவர் தற்போது இறந்துவிட்டார் என்றால் ஆமாம். பெரிய புலியன் பேரன்மார் கரையில் சுப்பையா அம்பலக்காரருக்கு அடுத்து சுழற்சி முறையில் போஸ் என்பவர்

அம்பலக்காரராக இருந்தார் என்றால் ஆமாம். சுழற்சி முறையில், வகுத்துப்புலியன் பேரன்மார் கரையில் பெரிய புலியன் அம்பலக்காரராக இருந்தார் என்றால் ஆமாம். தற்போது, வகுத்துப்புலியன் பேரன்மார் கரையில் சுழற்சி முறையில் மகாமுனி என்பவர் அம்பலக்காரராக இருக்கிறார் என்றால் ஆமாம்.

5. கருப்பாத்தான் பேரன்மார் கரையில், தொந்திப்புலியன் என்பவரும், வல்லாளத்தேவன் என்பவரும், அம்பலக்காரராக இருந்துள்ளாரா என்றால் தொந்திப்புலியன் என்பவர் அம்பலக்காரராக இருந்ததில்லை. வல்லாளத்தேவன் என்பவர் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரை சார்பாக அம்பலக்காரராக இருந்தார். தனிக்கண் பேரன்மார்கள் கரையில் தனிக்கண் என்ற கருப்பண், ராஜேந்திரன் ஆகியோர்கள் அம்பலக்காரர்களாக இருந்துள்ளார்கள் என்றால் ஆமாம். மேற்படி, தனிக்கண் என்ற கருப்பண், ராஜேந்திரன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் ஆமாம்.

6. மேற்படி, நான்கு கரையிலும், சுழற்சி முறை அடிப்படையில் தற்போது மகாமுனி மட்டுமே உயிருடன் உள்ளார் என்றால் ஆமாம். மேற்படி, மகாமுனி என்பவர் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவரது அப்பாவை 3ம் பிரதிவாதியாக சேர்த்திருந்தோம். அவர் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி இறந்துபோன அய்யாவு என்பவர் பெரிய புலியன் பேரன்மார் கரையை சேர்ந்தவர் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி கருப்பாத்தான் பேரன்மார் கரையை சேர்ந்தவர் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி இறந்துபோன பாண்டி என்ற புலியன், வகுத்துப்புலியன் பேரன்மார் கரையை சேர்ந்தவர் என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதி செட்டியார்

சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும், நோட்டமாக கிராமத்திற்கு இருந்து வருகிறார் என்றாலும் ஆமாம்.

7. தாவா சொத்துக்களை பராமரிக்கும் வேலையும், பாதுகாக்கும் வேலையும் நான்குகரை அம்பலக்காரர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றால் இல்லை. நான்கு கரையை சேர்ந்த நபர்களும் டிரஸ்டியாக நியமிக்கப்படுவார்கள். மேற்படி, டிரஸ்டியாக ஆயுள்கால டிரஸ்டியாக நியமிக்கப்படுவார். இந்த வழக்கில் தனிக்கண் கரையை சேர்ந்த நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. டிரஸ்டிக்காக யார் யார் எப்போது இருந்தார் என குறிப்பிட்டு வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால், ஆயுள் கால டிரஸ்டியில் அரசப்ப வெள்ளையன் பேரன்மார் கரையைச் சேர்ந்த வீரணன் மட்டுமே தற்போது உள்ளார். மேற்படி, விவரத்திற்கு ஆவணம் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. ஆயுள்கால டிரஸ்டியை கிராமத்திலிருந்து தான் நியமிப்போம்.

8. எனக்கு பூர்வீகம் சூரக்குடி என்றால் இல்லை. எனது பூர்வீகம் A. வல்லாளப்பட்டி ஆகும். பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் சூரக்குடியைச் சேர்ந்தவர் என்றும், A. வல்லாளப்பட்டியில் குடியிருக்க வந்தேன் என்றும், சொல்லியுள்ளது சம்பந்தமாக மறுப்புரை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான்கு கரை அம்பலக்காரர்களும் சேர்ந்து தான் திருவிழா உட்பட அனைத்து விஷயங்களும் நடைபெறும் என்றால் ஆமாம். அனைத்து சமூகத்தை சேர்ந்தவர்களும் சாமி கும்பிட வருவார்கள் என்றால் ஆமாம். நான்குகரையை சேர்ந்த அம்பலக்காரர்களுக்கு தான் மரியாதை செய்வது வழக்கம் என்றால் மரியாதை செய்வது சம்பந்தமாக ஒரு கணக்கு

உள்ளது அதனடிப்படையில் மரியாதை செய்யப்படும். மேற்படி, விவரம் இந்த வழக்கில் மறைக்கப்பட்டது என்றால் இல்லை.

9. தாவா சொத்துக்களைப் பொறுத்து நான்குகரை அம்பலக்காரர்களுக்கு தான் பாத்தியம் என்றாலும் தனி நபர் யாரும் உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. அனைத்து நபர்களும் கூடி முடிவெடுத்து தான் அனைத்து முடிவும் செய்யப்படும். நான் கலிஞ்சமலை கருப்பசாமியை கும்பிடும் நபர் என்றால் ஆமாம். அந்த சாமி அரிட்டாப்பட்டியில் உள்ளது என்றால் அரிட்டாப்பட்டி எல்லையில் உள்ளது. A. வல்லாளப்பட்டிக்கு தெற்குப் பகுதியில் உள்ளது. அரிட்டாப்பட்டியில் மேற்குப் பக்கம் மலையடிவாரத்தில் உள்ளது.

10. பெரியபுலியன் அய்யனார் கோவில், சின்னப்புலியன் அய்யனார் கோவில் ஆகிய இரண்டும் 1927ம் ஆண்டு மூன்று கரையால் சேர்ந்த நபர்களால் கட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. கிராமத்திலிருந்து பொதுவாக கட்டப்பட்டது. நான் 1963ம் ஆண்டு பிறந்தேன். மேலே சொன்னவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரிந்த விவரங்களை சொன்னேன்.

11. ஆரம்பத்தில் பெரியபுலியன் பேரன்மார் கரை, கருப்பாத்தான் பேரன்மார் கரை, வகுத்துப்புலியன் பேரன்மார் கரை ஆகிய மூன்று கரையை சேர்ந்த நபர்கள் தான் பெரியபுலியன் அய்யனார் கோவில், சின்னப்புலியன் அய்யனார் கோவில், அழகர் கோவில் மண்டகப்படி, ஆடித்தேரோட்டம், பஜனை மடம், விநாயகர் கோவில், மந்தை கருப்பசாமிகோவில் ஆகிய அனைத்து நிர்வாகத்தையும் செய்து வந்தார்கள் என்றாலும், அவர்களுடன் தனிக்கண் கரை பேரன் மார்களும், சேர்ந்து கொள்வார்கள் என்றால் இல்லை.

12. கோவிலிருந்து வரும் வருமானத்தை ஏழை மக்களுக்காக பயன்படுத்தி வருகிறோம் என்று சொல்லியுள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.